கள் அப்படி தள்ளி எடுத்து விடுவதினாலே இன்னொரு 10, 15 சதவீதம் அதோடு சேர்த்துக் தள்ளவேண்டியதிருக்கிறது. ஆக, 30, 35 சதவீதத்தில் எந்த அளவிற்கு வேலைகள் நடைபெறும்? எனவே இதைத் தவிர்ப்பதற்கு இந்த அளவிற்குத் தான் விழுக் காடு தள்ளிப் போடவேண்டும் என்ற வகையில் அரசு உத்தரவைக் கொண்டு வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அதர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய அந்த சதவீதம் குறைத்து எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். ந்தவேலை நடந்து கொண்டிருக்கிறது. அப்படி வேலை நடக்காய ஒரு சூழ்நிலை உருவாகும் என்று சொன்னால் அதன் மீது தகுந்த நேரத்தில் த்குந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மானாமதுரைத் தொகுதி உப்பாற்றில் செய்களத்தூர் அருகே கால்வாய் வெட்டுதல்.

66—(வினா எண் 7566)—திரு. க. பாரமலை : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரைத் தொகுதியில் உப்பாற்றில் செய்களத் ஞூர் அருகே கட்டப்பட்டிருக்கும் அணையிலிருந்து செல்லும் கால்வாய் வெட்டி முடிக்கப்படாமல் பயனற்று இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அணையிலிருந்து வெட்டப்பட்டிவிருக்கும் கால்வாயில் மொத்த நீளம் 21 கி. மீ. தலைப்பிலிருந்து 16 கீ.மீ. வரையிலும் அதற்கு கீழே சில ப திகளிலும் வேலை முழுதும் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வேலைகளுக்கு அருகிலுள்ள நிலங்களிலிருந்து மண் எடுப்பதற்கு பொது மக்களிடமிருந்து எதிர்ப்பு இருப்பதால், செயல்ப த்த முடியாமல் உள்ளது. யினினும், மீதமுள்ள வேலைகளை விரைவில் முடிப்பத்ற்கு நல லுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

1986 நவம்பர் 18]

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது 21 கிலோ மீட்டர் தூரத்தில் 16 கிலோ மீட்டர் தூரம் வெட்டி முடித்ததாக சொன்னார்கள். இது அதிகாரிகள் கொடுத்த தகவல் என்று நான் கருதுகிறேன். அந்த 16 கிலோ மீட்டர் தூரத்தில் கூட இடை இடையே பலயிடங்களில் வெட்டாமல் இருக்கிறது. சில வெட்டிய இடங்களிலும் மூடப்பட்டிருக்கிறது. முழுமையாக அந்த கால்வாய் பயன்படுத் தப்படாமல் இருக்கிறது. அந்த 16 கிலோ மீட்டர் தூரத்திற்கும் கால்வாய் முழுமையாக பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. இதற்கு மொத்த மதிப்பீடு ஆரம்பத்தில் எவ்வளவு எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். ஆர். இராமசந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினர் சொல்லியது போல் பலயிடங்களில் பாறையாக இருந்த காரணத்தால் அங்கே வெட்டாமல் இருப்பது அரசின் கவனத்தில் இருக்கிறது. இதை எல்லாம் வைத்துக்கொண்டு முதலில் ஏறத் தாழ 9 லட்ச ரூபாயில் ஆரம்பிக்கப்பட்ட வேலை 25 லட்ச ரூபாய் வரைக்கும் ஏறத்தாழ செலவழித்துக் கொண்டிருக் கிறோம். இப்போது மீதமுள்ள வேலையை செய்வதற்கு ஊர நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக 40 லட்ச ரூபாய்க்கு மத்திய அரசுக்கு நாங்கள் பரிந்துரை செய்து இரு கிறோம். ஆகவே நிச்சயமாக அந்த வேலைகள் செய்து முடிக்கப் படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்த வேலை சேர்க்கப்பட்டு இருப்பதாக மாண்புமிறி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நான் நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேலை எப்போது துவங்கப் படும்? அந்த மீதம் உள்ள 5 கிலோ மீட்டர் ஸ்ரீரத்தில் அதிகமான நில எடுப்பு சம்பந்தப்படவில்லை. ஆகவே, அந்த 5 கிலோ மீட்டர் தூரத்தையும் இத்தோடு சேர்த்து செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 40 லட்ச ரூபாயில் மீதமுள்ள வேலை சேர்த்து எடுப்பதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து இருக்கிறோம். மத்திய அரசு ஒப்புக்கொண்டு வந்த உடனே உடனடியாக வேலை எடுக்கப்ப ம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1986 நவம்பர் 18

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற பல பணிகளில் அதிகாரிகள் அதாவது இன்ஜினியர்கள் அடிக்கடி மாற்றப்படுவதால் அந்த பணிகள் முடிவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. புதிதாக வருகின்ற இன்ஜினியர்கள் அந்த பணியை புரிந்து கொண்டு வேலையை தொடங்கும் முன் அவரும் மாற்றப்படுகிறார். ஆகவே, நாட்டின் நலன் கருதி அதிகாரிகள் மாற்றம் என்பது ஒரு கால கட்டத்திற்குள் தான் செய்ய வேண்டும் என்ற ஒரு கண்டிப்பான உத்திரவை அரசு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. சே. எஸ். எஸ். ஆர். இராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியது போல் இந்தத் துறையில் நடக்கவில்லை. காணம் ஒரு அதிகாரி 3 வருடம் இருக்கவேண்டும் என்ற ஒரு கட்டாயம் இருக்கிறது. அதேபோல் 1 1-2 வருட காலத்திற்குள் எந்த காரணத்தைக் கொண்ம் மாற்றக்கூடாது என்பதையும் அப்படி மாற்றுகின்ற நேரத்தில் சரியான காரணம் அவர் மீது இல்லாமல் மாற்றக்கூடாது என்ற உத்திரவை மாண்புமிகு முதல்மைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. அண்ணுமலைன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கால்வாய் மானாமதுரை தொகுதிக்கும், இளையாங்குடி தொகுதிக்கும் பயன்பட இருக்கிற காரணத்தால் இதைப் பற்றி அதிகாரிகளை கேட்கின்ற நேரத்தில் வெட்டப்படுகின்ற கால்வாயில் தண்ணீர் ஏற முடியாத நிலை இருக்கிற காரணத்தால் வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது என்று எங்களிடம் சொன்னார்கள். அது உண்மையா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சொல்லப்பட்ட தகவல் சரியான தகவல் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வால்பாறையில் நல்லாறு அணைத்திட்டம்

67. (வினா எண் 8383).—திரு. வி. தங்கவேலு—மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் நல்லாறு அணைக்கட்டுத் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) இதன் மதிப்பீடு எவ்வளவு ?